UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நெய்தலும் மணமும்

**முனைவர் ஆறுச்சாமி. செ**
உதவிப்பேராசிரியர், நெறியாளர், மொழிகள்துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 21
**ORCID: 0000-0002-4600-3915**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாக்களை அணி நெய்தல், பணி நெய்தல், இரங்கிய போக்கோர் நெய்தல், நல்லந்துவனார் நெய்தல் என்பன போன்ற சொற்களால் சிறப்பிக்குமாற்றைக் காணலாம். தோழி கூற்று மிகைநிலையில் இடம்பெற்றுள்ள நெய்தல் பாக்களில், நிலைபெற்ற உண்மைகள் பாடுபொருளாக்கப்பட்டுள்ளன என்பர். இலக்கிய நயம், இயற்கை வருணனை, வரலாற்றுச் செய்திகள், அக்காலப் பழக்க வழக்கங்கள், நம்பிக்கை வயப்பட்ட செய்திகள் போல்வன பதிவு பெற்றுள்ளன. நெய்தல் மக்களின் அன்றாட சமூக வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ள பாக்களில் நெய்தல் மக்களின் திருமண குறித்த செய்திகளை ஆய்வு செய்யப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** நெய்தல், மணம், வாழ்வியல், மடலேறுதல்.

**முன்னுரை**

வரைவு கடாவுதல் (மணம் செய்து கொள்ளுமாறு வேண்டுதல்), வரைவு நீட்டித்தல், பகற்குறி, இரவுக்குறி போன்ற அகவாழ்க்கை நிகழ்வுகள் குறிஞ்சியில் உள்ளது போல் நெய்தலிலும் உண்டு. அகநிகழ்வு அல்லாத, நெய்தலுக்கே சிறப்பாக உரிய சில நிகழ்வுகளையும் காண முடிகின்றது. அவற்றுள் சிற்றில் கட்டி விளையாடல், கூடல் இழைத்தல், மீன் உணக்கல், மீன்கறி ஆக்கல், இயற்கையையும் உறவாக நினைத்தல், மடலேறுதல் போன்றவை குறிக்கத்தக்கன. இவை அகவாழ்க்கை நிகழ்வுகளோடு இணைத்துச் சொல்லப்படுகின்றன. அவ்வாறு நிகழக்கூடிய திருமணம் குறித்த செய்திகளை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**திருமண உறுதி**

தலைவனும், தலைவியும் களவு வாழ்க்கை மேற்கொண்டதினால் ஊரில் அலர் ஏற்பட்டதைத் தொடர்ந்து இருவருக்கும் திருமண உறுதி செய்கின்றனர். இதனால் தலைவி தலைவனுக்கு உரிமையுடையவள் ஆகின்றாள். இதன் காரணமாக ஊரில் ஏற்பட்ட அலர் மாறப் போகின்றது என்ற மகிழ்ச்சியைத் தோழி தலைவியிடம் வெளிப்படுத்துகின்றாள். இதனை,

**வளையோய் உவந்திசின் விரைவுறு கொடுந்தாள்**

**அளைவாழ் அலவன் கூருகிர் வரித்த**

**ஈர்மணல் மலிர்நெறி சிதைய இழுமென**

**உருமிசைப் புணரி உடைதரும் துறைவர்க்கு**

**உரிமை செப்பினர் நமரே விரியலர்ப்**
(குறுந்.351:1-5)

என்னும் பாடல் வரிகள் மூலம் சங்ககாலப் பரதவ மக்களிடம் திருமண நிச்சயம் நடைமுறையில் இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

**திருமணத்திற்கு மறுநாள்**

நெய்தல் நிலத்தில் திருமணத்திற்கு மறுநாள் தோழி தலைவன் தலைவியைக் காண அவர்களின் இல்லம் செய்கின்றாள். தலைவன் தோழியிடம் பிரிவுக் காலத்தில் நீ தலைவியை, நன்கு ஆற்றுவித்தாய் என்று கூறினான். அதற்குத் தோழி நான் எதுவும் செய்யவில்லை தலைவியின் நலன் கெடாமல் இருக்க நீயே விரைந்து வந்து திருமணம் செய்து காத்தாய் ஆனால் இப்போது தலைவி பசந்ததற்குக் காரணம் நீவிர்தான் தலைவியின் சிறு கை நெகிழாமல் இருக்க நீவீர் சிறிது பிரியாமல் இருத்தல் வேண்டும் என்று கூறினாள்.

**பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய**

**உழையின் போகாது அளிப்பினும், சிறிய**

**ஞெகிழ்ந்த கவின் நலம் கொல்லோ?**
(நற் .60:8-10)

மேலும்,

**ஆடிய தொழிலும் அல்கிய பொழிலும்**

**உள்ளல் ஆகா உயவு நெஞ்சமொடு**

**ஊடலும் உடையமோ உயர் மணற் சேர்ப்ப**

**திரை முதிர் அரைய தடந் தாள் தாழைச்**

**சுறவு மருப்பு அன்ன முட் தோடு ஒசிய**

**இறவு ஆர் இனக் குருகு இறைகொள இருக்கும்**

**நறவு மகிழ் இருக்கை நல் தேர்ப் பெரியன்**

**கள் கமழ் பொறையாறு அன்ன என்**

**நல் தோள் நெகிழ மறத்தல் நுமக்கே**
(நற்.131:1-9)

என்னும் இவ்விரு பாடலின் கூற்று மூலம் திருமணத்திற்கு பின்பு என்னும் நிலைபாடு அறிய முடிகின்றது.

**திருமண மறுப்பு**

நெய்தல் பாடல்களின் மணம் நீட்டித்தல் பல பாடல்களில் கூறப்பட்டுள்ளன. ஆயின் நற்றிணைப் பாடல் ஒன்றில் இரு குடும்ப நிலையையும் எடுத்துக்கூறி திருமணத்திற்கு மறுத்துரைக்கும் செய்தி இடம் பெற்றுள்ளது. தலைவியுடன் களவுக் கூட்டம் வரும் தலைவன் அவளை மணந்து கொள்வதில், களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல், களவு வெளிப்பட்ட பின் வரைதல் என இருமுறைகள் உள்ளமையை,

**வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று**

**ஆயிரண்டென்ப வரைதலாறே** (களவியல் 50)

என்பார் தொல்காப்பியர். திருமணத்திற்குரிய ஒப்புப்பாகுபாடு, தலை மகனுக்கும் தலைவிக்கும் உளதாகும்.

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**

**உருவு நிறுத்த காம வாயில்**

**நிறையே அருளே உணர்வொடு திரு என**

**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே**
(மெய்ப்.25)

என்று தொல்காப்பியர் குலம், ஒழுக்கம், பண்பாடு, ஆள்வினையுடைமை, வயது, வடிவம், வனப்பு, காம ஒழுக்கத்திற்குரிய உள்ளக்கிளர்ச்சி, சால்பு அருளுடைமை, உள்ளக் குறிப்பை அறிந்து ஒழுகும் நுண்ணறிவு தெய்வப்பொலிவு ஆகிய பத்தும் அமைதல் வேண்டும் என்பார்.

பரதவரின் மகள் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ள தலைவன் விரும்பிச் சென்றபோது அதனைத் தோழி மறுத்துரைப்பதாக அமைந்த பாடலில் தலைவி கடற்கரைச் சோலையிலுள்ள சிறுகுடிலின் கண்ணே இருக்கும் மீன் வேட்டைத் தொழிலை உடைய பரதவர் மகள். ஆனால் தலைவனோ தேரை உடைய செல்வம் மிக்கவனின் மகன். எம் குலத்துக்குப் பொருந்தும் தன்மை அல்லாதவன். நாங்கள் சுறா மீனை அறுத்துக் காய வைத்து, அவற்றைத் தின்ன வருகின்ற பறவைக் கூட்டங்களை ஒட்டி விரட்டும் தொழிலை உடையவர்கள். உடம்பு முழுவதும் புலால் நாற்றம் வீசும் தன்மை உடையவர்கள். எனவே நீர் எம் அருகில் வருவது கூட முறையன்று. கடலே எம் சிறு

வாழ்க்கைக்கு உதவுகின்றது. உம் போன்ற உயர்வான வாழ்வு உடையதன்று. மேலும், எங்கள் பரதவர் குடியில் உங்களைப் போன்ற செல்வந்தர்களும் உளர் என மணத்தை மறுத்துரைத்ததை,

**மீன்எறி பரதவர் மகளே, நீயே**

**நெடுங்கொடி நுடங்கும்**

**கடுந்தேர்ச் செல்வன்**

**பெருநீர் விளையுள் எம்சிறு நல்வாழ்க்கை**

**எம்மனோரில் செம்மலும் உடைத்தே**

(நற்.45:3-11)

என்ற பாடலில் சமூகத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வு முன்னிலைப்-படுத்தப்படுவதுடன் செய்தொழிலான பறவை விரட்டல், மீன்காய வைத்தல், புலால் நாற்றம் போல்வன திருமண மறுப்புக்குக் காரணமாக்கப்-பட்டுள்ளமைமையத் தெளியலாம். நெய்தல் மக்களின் பண்பாட்டு நிலைக்களனுக்கு இப்பாடல் சான்றாகும்.

## மடலேறுதல்

தலைவன், தான் விரும்பிய தலைவியை அடைய முடியாத நிலையில், அவளை அடைந்தே தீருவேன் என்ற உறுதிப்பாட்டில் சற்றும் மனம் தளராமல், அவ்உறுதிபாட்டின் இறுதி நிலையாக மடலேறுவான். கலித் தொகையில் மடலேறுதல் குறித்த பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இம்மடலேறுதல் பெருந் திணையின் பாற்படுவதை,

**ஏறிய மடல் திறம் இளமைதீர் திறம்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**

**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே**

(அகத். 54)

தொல்காப்பியப் பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். இங்கு, மடல் ஏறியதிறம், இளமை தீர்ந்த திறம், தெளிதல் இல்லாத காமத்து மிகுதிறம், மிக்க காமத்து மிடல் என்று நான்கு செயல்களும் பெருந்திணைக்குரியவையாகும் என்பார் தொல்காப்பியர்.

மடலேறுதல் தலைவன்பாலுள்ள மிகுந்த காதல் வேட்கையை நிறைவேற்றுவதற்கு இடையூறு ஏற்படுகின்ற காலத்து நிகழ்வதா கும். மடலேறுதல் என்பது பனங்கருக்கால் செய்த குதிரை மேலேறுதல். தலைவியைக் காதலித்து, அவளையே மணம்புரிவதற்கு விரும்பிய தலைவன், அவளைப் பெற இயலாதபோது நாற்சந்தி கூடுமிடத்தில் மடலேறுவான். உடல் முழுவதும் நீறு பூசி, தலைவியின் ஓவியத்தைத் தன் கையால் எழுதி, அந்த ஓவியத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, அதன் மீது தன் கண்ணையும் கருத்தையும் நிலைநிறுத்திய வண்ணம் தோன்றுவான். மடலேறும் தலைவனிடம் உள்ள ஓவியத்தைக் கண்டுஇன்னவளுக்கு இவனுக்கும் நட்பு உண்டு என்பதை அறிந்து, அதனை வெளிப்படக் கூறிப் பழிப்பர். அதுகேட்டுத் தமர்மணம் புணர்விப்பர் தன் உடம்பிற்கு ஏற்படுகின்ற துன்பங்கள் எவற்றையும் பொருட்படுத்தும் பண்பு தலைவனுக்கு இல்லை.

மடல் ஏறி நிற்கின்ற நிலையில் அவனைக் காண்பவர்கள் சோதித்து அறிய எண்ணி சோதனை தர முடியுமா? என்று வினவுவர். அதற்கு இசைந்த தலைவன் குதிரையை எழுப்பிப்பான். அப்போது பனங்கருக்குப் பகுதியில் உள்ள முள் போன்ற பகுதி உடம்பில் பட, அவன் உடம்பிலிருந்து இரத்தம் சுரக்கும். அவ்வாறு உடம்பினின்று சுரக்கும் இரத்தம் (குருதி) வெண்ணீராகத் (சுக்கிலம்) தோன்றின் அவன் விரும்பிய தலைவியை அவனுக்கே மணம் செய்விப்பர். “வெண்ணீர் தோன்றாமல் மாறாக இரத்தமே (குருதி) தோன்றினால் அவனைக் கூடியிருப் போர் தண்டிப்பர். தலைவிக்குத் (காதலிக்கு) தலைவன் மீது சிறிதும் விருப்பம் இல்லையாயின் அது கைக்கிளையாகும் என்பர். அங்ஙனமின்றி தலைவி உடன்போக் கிற்கு இயலாமை நேரிடும்போதும், காதலின் விழைவு அளவு கடந்த நிலையில் இருக்கும்போதும் மடலேறுவதற்குக் காரணமானால் அது பெருந்திணையாகும்” என ந.சுப்புரெட்டியார், அவர்கள் தன்னுடைய நூலில் குறிட்டுள்ளதனைக் காணமுடிகிறது. (தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை, 2012, பக். 48-49).

கலித்தொகைத் தலைவன் மடலேறுவதாக 138, 139, 140, 141 ஆகிய பாடல்களில் குறிப்புகள் உள்ளன. மடல் ஏறும் குதிரையில் சூட்டவேண்டி நூலாலே நீலமணி போன்ற நிறம் உடைய மயிற் பீலியையும் பூளைப் பூவையும் ஆவிரம்

பூவையும் எருக்கம் பூவுடன் சேர்ந்துத் தொடுத்து அம்மடற்குதிரையில் (மா) கட்டிவைத்து, ஊரின் தெருவில் இவன் இவளை அதாவது தலைவியைப் பற்றிப் பாடுவான். இதனை எல்லோரும் கேட்பீர்கள் என்று கூறுவான்.

**மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை**

**அணிப் பூளை, ஆவிரை, எருக்கொடுபிணித்து யாத்து**

**மல்லல்ஊர் மறுகின் கண் இவட்பாடும்,**

**எல்லாரும் கேட்டீமின் என்று**

(கலி.138:8-11)

**அணி அலங்கு ஆவிரைப் பூவொடு எருக்கின்**

**பிணையல் அம் கண்ணி மிலைந்து மணி ஆர்ப்ப**

**ஓங்கு இரும் பெண்ணை மடல் ஊர்ந்து என்எவ்வநோய்** (கலி.139:7-10)

என்னும் பாடல்களில் மேற்கானும் செய்தியை வழியுறுத்துகிறார். என் துயரின் இயல்பைப் போக்குதல் உம்மிடத்து முறைமையாகும் என்று சான்றோரை நோக்கி மடலேறும் தலைவன்,

**உயர்நிலை உலகம் உறீஇயாங்கு என்**

**துயர் நிலை தீர்த்தல் நும் தலைக்கடனே**

(கலி.139: 36-37)

என்னும் வழிகளில் வழியுறுத்துவான். மேலும், மடலேறும் தலைவன் என்னிடம் உண்டாகும் மிகுவருத்தத்தை நான் உங்களுக்குத் தெரிவித்தேன். இதை நீங்கள் தெளிய ஆராயும்போது, நான் கொண்ட காமநோய் நீங்குமாறு தலைவி எனக்கு அருள் செய்யும்படிச் செய்வீராயின், அச்செயல் உங்களுக்கு அறமும் புகழும் தரும் என்றான். இதனை,

**என் கண் இடும்பை அறீஇயினென்; நும்கண்**

**தெருளுற நோக்கித் தெரியுங்கால், இன்ன**

**மருளொடு நோயொடு மம்மர் அகல**

**இருளுறு கூந்தலாள் என்னை**

**அருளுறச் செய்யின், நுமக்கு அறனுமார் அதுவே** (கலி.140: 30-34)

இப்பாடல்களில் மடல் ஏறும் தலைவன் சான்றோரை விளித்து முறைமை செய்யும்படியும், அச்செயல் அறத்தைத் தருவது புகழுக்குரியது என்றும் கூறும் கூற்று காதலின் அன்பு மிகுதியைக் காட்டுவதாகும்.

## முடிவுரை

இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கையை வாழும் மனிதர்கள் இயற்கைப் பொருள் களையும் தம் உறவாக நினைப்பதும் அந்நிகழ்வுகளின் வழி மனிதனின் அன்றாட் செயல்பாடுகளினை இணைத்துக் கூறுவதில் புலவர்கள் பெரும் தன்மைக் கொண்டவர் களாக காணப்படுகின்றனர். சங்க மக்களின் மென்மையான பண்புக்கு மிகச் சிறந்த சான்றாகிறது.

## துணை நின்ற நூல்கள்

1. இராகவையங்கார். ரா, அகநானூறு மூலமும் பழைய உரையும், கம்பர் விலாசம், 1923
2. சக்திதாசன், கலித்தொகை மூலமும் விளக்கமும், அன்பு வெளியீடு, 59, பிராட்வே சென்னை - 1 1958
3. சாமிநாதையர்.உ.வே., நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90
4. சாமிநாதையர்.உ.வே. , ஐங்குறுநூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 90
5. சாமிநாதையர். உ.வே., குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல், நிலையம், சென்னை - 90